**சரியான விடை +1வணிகவியல் காலாண்டுத்தேர்வு செப்-2018**

1. (இ) பாண்டியன்
2. (அ) போக்குவரத்து
3. (இ) சிறப்புத் தொழிலில்
4. (அ) இலாபம் ஈட்டுதல்
5. (அ) உற்பத்தித் தொழிலில்
6. (ஆ) விளம்பரம் / இ) பண்டகசாலை
7. (அ) தனியாள் வணிகம்
8. (ஆ) கூட்டு வாரிசுதாரர்
9. (ஆ) விருபத்தின் பேரில்/ (இ) அவசியமில்லை
10. (ஈ) பங்குதாரர்
11. (அ) இங்கிலாந்து
12. (இ) தவறான நிர்வாகம்
13. (அ) பன்னாட்டு நிறுமம்
14. (இ) புதுடெல்லி
15. (ஆ) எஸ்.பி.ஐ.
16. (ஆ) 1935
17. (இ) 2 இலட்சம்
18. (ஆ) 1957
19. (ஈ) விமானம்
20.(ஆ) கூட்டுறவு

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. வெளிநாட்டு வங்கிகள்** வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையும், இந்தியாவில் கிளை அலுவலகத்தையும் கொண்ட வங்கிகள், வெளிநாட்டு வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன. எ.கா
1) பாங்க் ஆ∴ப் அமெரிக்கா - அமெரிக்கா
2) பார்க்லேஸ் பாங்க் - இங்கிலாந்து
3) டியுட்செபாங்க் - மேற்கு ஜெர்மனி

**22. நாளங்காடி:** பாண்டியர் ஆட்சிக் காலத்தில் பொருள்கள் விற்கும் இடத்தினை அங்காடி என அழைக்கப்பட்டது. அப் பொருள்களின் விற்பனை, **பகலில் நடந்ததை** நாளங்காடி என அழைக்கப்பட்டது..

**23 இந்துச் சட்டத்தின் இரண்டு பிரிவுகள்:** (i) தயாபாகா மற்றும் (ii) மிட்டாக்சரா

**24. பட்டய நிறுமங்கள்** ஒரு நாட்டின் அரசாலோ, அரசிடமோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் பட்டய அல்லது சாசன நிறுமங்கள் என்று அழைக்கப்படுகின்றன. வழங்கப்பட்ட சாசனத்தில் கூறியுள்ள விதிமுறைகளின் படி இவை செயல்படும். உதாரணம் கிழக்கிந்திய நிறுமம் ஸ்டேண்டார்டு சார்ட்டு வங்கி,

**25.கூட்டுறவு சங்கத்திற்கு எ.கா.(2) :** 1. இந்தியன் காபி ஹவுஸ் (ரெஸ்டாரெண்ட்) 2. மதர் டெய்ரி (ஆவின்) 3. ஸ்ரீ மகிலா கிரியா உத்யோக் விஜஜத் பாபட் 4. இந்திய விவசாயிகள் உரங்கள் கூட்டுறவு லிமிடெட் (IFFCO) 5. இந்திய விமான நிறுவனம் (சரக்கு)(C.G.H.S.Ltd) 6. கோஆப்டெக்ஸ்

**26. பன்னாட்டு நிறுவனம் - இலக்கணம்** பன்னாட்டு நிறுவனம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டநாடுகளில் வியாபாரத்தை நடத்துவதாகும்.**நைல். H. ஜே கோபி**
**எ.கா:(ஏதேனும் 2)** பாட்டா, கோல்கேட் பாமலிவ், சோனி கார்ப்பரேசன், சுசூகி, டைமெக்ஸ் வாடச், மைக்ரோமக்ஸ் இன்பர்மேடடிக்ஸ், ஹீரோ மோட்டார்ஸ் கார்ப்பரேசன், பஜாஜ், பிரிட்டானியா, டிவிஎஸ், டாட்டா, இனபோசிஸ்

**27. மைய வங்கி** டிகா அவர்களளின் கூற்றுப் படி, ஒரு நாட்டின் பணம் மற்றும் வங்கிக் கட்டமைப்பின், உச்ச நிலையமாகவும், தேசியப் பொருளாதார நலனுக்காகவும், சிறந்த முறையில் செயல்படும் வங்கி, அந்த நாட்டின் மைய வங்கி எனப்படும்

**28. தானியங்கி பணம் வழங்கும் அட்டை** தானியங்கி பணம் வழங்கும் அட்டையைப் பயன்படுத்தி இந்தியாவில் எங்கிருந்தும் எந்தவொரு நேரத்திலும் பணத்தை எடுக்கமுடியும். இயந்திரம் வாடிக்கையாளர்களின் கணக்கில் இருக்கும் மீதி இருப்பு தொகையையும் காட்டுகின்றன.

**29. மருத்துவக் காப்பீடு:** மருத்துவக் காப்பீடு என்பது, காப்பீட்டு நிறுவனங்களுக்கும் தனிநபர்கள் அல்லது மனிதக் குழுக்களுக்கும் இடையே ஏற்படும் ஒப்பந்தம் ஆகும். இந்த ஒப்பந்தப்படி காப்பீடு தருநர் குறிப்பிட்டஅளவு முனைமம் பெற்றுக் கொண்டு குறித்த காலத்திற்கு உடல் நலக் காப்பீட்டை வழங்க ஒப்புக்கொள்கிறார்.

**30. மின்னனு வணிகம்** மின்னணு வலைத்தளத்தின் மூலம் பொருட்களை வாங்குதல் மற்றும் விற்றலுக்கு மின்னனு வர்த்தகம் எனப்படுகிறது. மின்னனு தொழில் என்பது, ஒரு விரிவான சொல். இந்த சொல்லில் இணையதளம் மூலம் நிறுமத்திற்கு உள் மற்றும் வெளியில் நடைபெறும் அனைத்து வியாபார நடவடிக்கைளையும் மின்னணு வர்த்தகம் என்ற சொல் குறிக்கும்.

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. இந்து கூட்டுக்குடும்ப வியாபாரத்தின் பண்புகள் (ஏதேனும் 3) i. இந்துச் சட்டத்தின் படி கட்டுப்படுத்துதல்** இந்து கூட்டுக் குடும்ப வியாபாரம் இந்து சட்டத்தின்படி கட்டுப்படுத்தப்பட்டு மேலாண்மை செய்யப்படுகிறது. இந்துச் சட்டத்தின் இரண்டு பிரிவுகள்: (i) தயாபாகா மற்றும் (ii) மிட்டாக்சரா **ii. மேலாண்மை** இந்து கூட்டுக் குடும்ப வியாபாரத்தை கட்டுப்படுத்துவது மற்றும் மேலாண்மை செய்வது “கர்த்தா” அல்லது “மேலாளர்” என்று அழைக்கப்படுகிறார். அக் குடும்பத்தில் கர்த்தாவே மூத்த ஆண் நபராவார். அக் குடும்பத்தில் உள்ள அனைவரும் கர்த்தாவின் மேல் முழு நம்பிக்கை உள்ளவர்கள். கர்த்தாவே வெளியாட்களுடன் உடன்படிக்கை செய்ய உரிமை பெற்றவர். ஆனால் கர்த்தாவின் அனுமதி பெற்றே குடும்ப உறுப்பினர்கள் வெளியாட்களுடன் உடன்படிக்கை செய்யலாம். **iii. பிறப்பால் உறுப்பினர்:** இக்குடும்பத்தில் உறுப்பினராக வேண்டும் என்றால் அக்குடும்பத்தில் ஒருவராக பிறக்க வேண்டும். அக்குடும்பத்தில் பிறக்கும் ஆண் குழந்தையே குடும்ப உறுப்பினராக முடியும். **iv. பொறுப்பு:** கர்த்தாவைத் தவிர மற்ற குடும்ப உறுப்பினர்களின் பொறுப்பு என்பது வியாபாரத்தில் அவருக்குள்ள பங்கின் அளவுக்கு வரையறுக்கப்பட்டது. கர்த்தா மட்டுமே அவ்வியாபாரத்தில் பொறுப்பாளராக ஆக்க இயலாது. எனினும் கடனீந்தோருக்கு கர்த்தாவின் தனிச்சொத்தை கைப்பற்ற உரிமையுண்டு. **v. நீடித்த வாழ்வு** குடும்ப உறுப்பினரின் மரணம், நொடிப்பு நிலை, மனச் சமநிலை, இழப்பு ஆகியவை வியாபாரத்தை பாதிக்காது.

அவ்வியாபாரம் தொடர்ந்து மற்ற குடும்ப உறுப்பினர்களால் நடைபெறும். **vi. கர்த்தாவின் உட்கிடை அதிகாரம்** வியாபாரத்தின் நலனிற்காக ஒப்பந்தத்தில் ஈடுபடல் மற்றும் வியாபார காரணங்களுக்காக வியாபார சொத்துக்களை அடமானம் வைத்தல் போன்றவற்றை செய்யும் உட்கிடையான அதிகாரம் கர்த்தாவிற்கு மட்டுமே உண்டு. **vii. இளவர் கூட்டாளி** கூட்டாண்மையில் கூட்டாண்மையின் நலனிற்காகவும், இளவரின் நலனிற்காகவும் மட்டுமே கூட்டாளியாக முடியும். ஆனால் இந்து கூடுக்குடும்பத்தில் பிறந்த குழந்தையும் ஒரு கூட்டாளி ஆகலாம். **viii. கலைப்பு:** இந்து கூட்டுக் குடும்பத்தில் உறுப்பினர்கள் அனைவரின் விருப்பத்தின் பேரில் வியாபாரத்தை கலைக்கலாம். எந்த ஒரு தனி உறுப்பினரும் கூட்டாண்மையை கலைக்க இயலாது.

**32. பண்டைய தமிழ்நாட்டின் வர்த்தக வளர்ச்சியில் சங்ககாலத்தின் பங்கு:** மலை வாழ் மக்கள் தேன், பழங்கள் மற்றும் கிழங்குகளையும் தரை- நிலம் வாழ் மக்கள், கால் நடைகள், பால் மற்றும் பால் பால் பொருட்களையும் பண்டமாற்றம் செய்தனர். கால்நடைகள் சில நேரங்களில் பண்டமாற்றுப் பொருளாக பணியாற்றின. உள்நாட்டு வியாபாரத்தில் உப்பு மாற்றுப்பொருளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சில காலம் நெல் பண்டமாற்றுப் பொருளாக விளங்கியுள்ளது

**33. தனியாள் வணிகத்தின் மூன்று பண்புகள்**

**1. தனிநபர் உரிமை** இது தனி நபரால் நடத்தக்கூடிய அமைப்பாகும். அவர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார். வணிக நிறுவனத்தின் உரிமையிலும், அதனை நிர்வகிப்பதிலும் மையமாகச் செயல்படுகிறார்.

**2. தலையீடு அற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு** இவர் தனது அறிவுத்திறன் மற்றும் பட்டறிவின் மூலம் யாருடைய குறுக்கீடின்றிச் செயல்படுகிறார். இதன் மூலம் உடனடியாகவும் விரைவாகவும் முடிவெடுக்கிறார். **3. வரையறாப் பொறுப்பு** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்தச் சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்தவேண்டும். **4. முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை** நிறுவனத்தின் முழு இலாபத்தையும் அனுபவிப்பதால், அவரைமேலும் அதிக இலாபம் ஈட்ட ஊக்கப்படுத்துகிறது. இலாபத்தின் உந்துதலால், அவர் தனது வணிகத்தை மேலும் விரிவாக்கம் செய்கிறார். **5. அரசு விதிமுறைகள் பின்பற்றாமை** இவ்வமைப்பை உருவாக்குவதிலோ, மேலாண்மை செய்வதிலோ அல்லது கலைப்பதிலோ அரசின் விதி முறைகளை பின்பற்றப்படவேண்டிய கட்டாயம் இல்லை. **6. குறைந்த மூலதனம் மற்றும் வரையறைக்குட்பட்ட மேலாண்மைத் திறமை** தனி ஒருவரே மூலதனம் வழங்குவதால், முதல் சிறிய அளவிலேயே இருக்கும். அதனால் நிதித் தடை ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகம். மேலாண்மைத் திறமைக் குறைவாக இருக்கும் சூழ்நிலையில், நிறுவன விரிவாக்கம் பெரிதும் பாதிக்கப்படலாம்.

**34. கூட்டுறவுகளின் குறைபாடுகள்(எவையேனும் மூன்று) 1) அளவான நிதி ஆதாரங்கள்** உறுப்பினர்களின் பங்கு முதல், குறைவாக இருப்பதால், கூட்டுறவு சங்கங்களினால் பெரும் முதல் திரட்டி, பேரளவு வியாபாரத்தில் ஈடுபடமுடிவதில்லை. **2) அரசின் நிதி ஆதாரங்களை பெரிதும் நம்பியிருத்தல்** கூட்டுறவு சங்கங்கள், ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் தங்களின் நிதி ஆதாரங்களை பெருக்கி கொள்ள முடியாமல், அரசின் நிதி ஆதரவை நம்பி இருக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளன. **3) அரசால் துவங்கப்பட்ட சங்கங்கள்** மேற்கத்திய நாடுகளில் நிறுமங்கள், தானாக முன் வந்து துவக்கப்படுகின்றன. ஆனால், இந்தியாவில் பெரும்பாலான சங்கங்கள், அரசின் வற்புறுத்தலால் துவக்கப்படுகின்றன. இப்படி திணிக்கப்பட்ட சங்கங்கள், மக்கள் ஆதரவின்றி நொடித்து போக வேண்டிய சூழ்நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. **4) தன்னிச்சையாக செயல்பட முடியாமை** கூட்டுறவு சங்கங்கள், அரசின் பிடியில் அல்லது மேற்பார்வையில் இயங்கி வருவதனால், அரசின் கட்டுப்பாட்டு விதி முறைகள், குறுக்கீடுகள், சங்கங்களை தன்னிச்சையாக செயல்பட அனுமதிப்பதில்லை. அவற்றின் தன்னாட்சி உரிமை முடக்கப்படுகிறது. **5) நாணயமற்ற நிர்வாக உறுப்பினர்கள்** உறுப்பினர்கள் நாணயத் தன்மை குன்றியவர்களாக இருந்தால், சங்கங்களின் நிதியை கையாடல் செய்து, சங்கங்களை பாதாளக் குழியில் தள்ளி புதைக்கும் வாய்ப்பு உள்ளது. **6) இரகசியம் காக்க முடியாமை** கூட்டுறவு சங்கங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட உறிபினர்கள் இருப்பதால், சங்கங்களின் செயல்பாடுகளான இலாபம், சொத்து பொறுப்பு நிலமைகள், வராக்கடன் முதலீடுகள் போன்ற அனைத்தையும் பகிரங்கமாக அறிக்கை மூலம் உறுப்பினர்களுக்கு தெரிவித்து விவாதிக்க வேண்டிய கடமை உள்ளது. எனவே இரகசியமாக ( மந்தனமாக ) செய்திகளை வைத்திருத்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை.

**35.இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள்** 1) ஒரு ஆளுநர் மற்றும் நான்கு துணைநிலைஆளுநர்கள், நான்கு ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கும் வகையில் நியமிக்கப்படுவார்கள், 2) பல்வேறு துறைகளில் இருந்து பத்து இயக்குனர்கள், 3) இரண்டு அரசு அதிகாரிகள் 4) நான்கு இயக்குநர்கள் ( வட்டார வாரியங்களில் இருந்து ஒவ்வொருவர்)

**36. தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம்** இது 2005 இல், இந்திய ரிசர்வ் வங்கியால் தொடங்கப்பட்டது. இந்த மின்னணு நிதி பரிமாற்றத்தின் கீழ் மொத்த நிதிபரிமாற்ற நடவடிக்கைகள், தொகுப்புகளாக்கப்பட்டு, குறிப்பிட்டநேரங்களில் இந்தியா முழுவதும் தீர்க்கப்படுகின்றன. **NEFT** செயல்படுத்தப்பட்ட கிளைவங்கிகளில் கணக்குகளைப் பராமரிக்கும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் **NEFT** முறையைப் பயன்படுத்தத் தகுதியுடையவையாகும். பரிவர்த்தனைகள் உண்மையான நேர அடிப்படையில் நடைபெறுவது இல்லை. ஒவ்வொரு அரைமணி நேரத்திற்கும், காலை 8.00 மணியிலிருந்து இரவு 7.30 மணி முடிய 23 தீர்வுகள் மட்டுமே ஒரு நாளில்

அனுமதிக்கப்படுகின்றன. **NEFT** பரிமாற்றங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மற்றும் வங்கி விடுமுறை நாட்களில் அனுமதிக்கப்படுவது இல்லை.

| **37. பண்டக சான்றானை** | **பண்டக காப்பாளர் இரசீது** |
|---|---|
| 1. உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணம். | உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணம் அல்ல. |
| 2. மற்றவர்களுக்கு இதை மாற்ற இயலும் | இதை மாற்றித் தர இயலாது |
| 3. இதை பிணையமாக வைக்க முடியும் | இதை பிணையமாக வைக்க முடியாது |

**38. IRDAI இந்தியக் காப்பீட்டு ஒழுங்கமைப்பு ஆணையம் - Insurance Rgualtory Development Authority of India** இந்தியாவிலுள்ள காப்பீட்டு நிறுவனங்கள் யாவும், மேற்பார்வை செய்து, ஒழுங்குபடுத்த ஓர் உயரிய தலைமை அமைப்பாக, தனித்துச் செயல்படும் சட்டப்படியானஆணையம், இந்தியக் காப்பீட்டு வளர்ச்சி ஒழுங்கமைப்பு ஆணையம் ஆகும். இந்தியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட (IRDAI ACT 1999) சட்டத்தின்படி 2000-ம் ஆண்டில் உருவாக்கபட்டது. இதன் தலைமைஅலுவலம் தெலுங்கான மாநிலத்தில் உள்ள ஹைதாரபாத் நகரில் உள்ளது.

**39.தனி உரிமையியல் இரண்டு நன்மைகள்** 1. இடர்களை குறைத்தல் 2. வணிக விரிவாக்கம் 3. விளம்பரச் செலவு 4. செயல் பாட்டிற்கு உறுதுணையாக இருத்தல்

**40.வணிகத்தின் சிறப்பியல்புகள் (ஏதேனும் 3)**

**1. பொருளாதார நடைமுறைகள் :** எந்த ஒரு பொருளாதார நடவடிக்கையின் நோக்கமும் இலாபம் ஈட்டுவதேயாகும். வணிகம் என்பது இலாபம் ஈட்டுவதற்கான நோக்கோடு மேற்கோள்ளப்படும் எந்த ஒரு பொருளாதார நடவடிக்கைளோடும் தொடர்புடையது. எனவே வணிகம் என்பது எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளையும் இலாபத்தைப் பெறும் நோக்கோடு மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது. **2. பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றம் :** வணிகம் என்பது இலாபத்திற்காக பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றத்தை உள்ளடக்கிறது. இந்தப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதின் நோக்கம் நுகர்வோருக்கு மறுவிற்பனை செய்வதேயாகும். **3. பலன் பெறும் நோக்கம் :** வணிகத் தொடர்பான நடைமுறைப் பணிகளை மேற்கொள்வதால் பெறும் இலாபமே அப்பணிக்கென கிடைக்கும் பலனாகும். இலாப நோக்கம் அல்லாது செய்யப்படும் எந்த ஒரு செயலும் வணிகத்தின் ஒரு பகுதியாக கருதப்படாது **4. பயன்பாடுகளை தோற்றுவித்தல் :** வணிகம் ஒரு பொருளுக்கு வடிவம், இடம் மற்றும் காலப் பயன்பாட்டை உருவாக்குகிறது. மூலப்பொருட்களை முடிவுப் பொருட்களாக மாற்றுவதன் மூலம் ஒரு பொருளுக்கு வடிவப் பயன்பாடு கிடைக்கிறது. **5. வணிக நடவடிக்கை ஒழுங்கு :** வணிக நடவடிக்கை எப்பொழுதும் வழக்கமாக நடைபெறுவதாக இருக்க வேண்டும். இதில் மாறுபட்ட அல்லது வேறுபட்ட நடவடிக்கைகள் இடம் பெறக்கூடாது.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ வணிகத்தின் தடைகள் 1. ஆள்சார் தடை** பொருள்கள் தேவைப்படும் நபர்களையும் நியாயமான விலையில் வாங்க விரும்புபவர்களையும் தொடர்பு கொள்ள முடியாத நிலை உள்ளது. உற்பத்தியாளரும் நுகர்வோரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பே கிடையாது. இக்குறைபாடே ஆள்சார் தடை எனப்படும். உற்பத்தியின் அளவு அதிகரிக்க நுகர்வோரை நாடிச் செல்ல வேண்டியுள்ளது. வணிகத்தின் முக்கிய அங்கமாகத் திகழும் வியாபாரம் இக்குறைபாட்டை நீக்க உதவுகிறது. **2. இடத் தடை** பொருட்கள் ஒரு இடத்தில் உற்பத்தி செய்யப்பட்டு நாடு முழுவதும் மற்றும் உலகம் முழுவதும் உள்ள நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ரயில், விமானம், கடல் மற்றும் நில போக்குவரத்து போன்றவை நுகர்வோர்களுக்கு பொருட்களை கொண்டு செல்லமுக்கிய போக்குவரத்தாக இருக்கிறது. **3.காலத் தடை** நுகர்வுத் தேவைப்படும் பொழுதும் வாங்கவிரும்பும் பொழுதும் பொருட்கள் கிடைக்க வேண்டும். தேவையைக் கணக்கில் கொண்டு பேரளவு உற்பத்தி செய்யப்படுவதும் நுகர்வோரிடம் விற்கத் தயார் நிலையில் வைத்திருக்கவேண்டும். ஒரு குறிப்பிட்டகாலத்தில் மட்டும் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள்ஆண்டு முழுவதும் தேவை ஏற்படும். எனவே பொருட்களைப் பண்டகக் காப்பகங்களில் சேகரித்துக் வைத்துக் கொள்வதன் மூலம் நுகர் பொருள் தொடர்ந்து கிடைக்கவழி ஏற்படும். **4. இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்கத் தடை:** பொருட்கள்முறையானசிப்பம் கட்டுதல் மற்றும் நவீனகுளிர்சாதனவசதி கொண்ட பண்டகசாலைகள் ஆகியவற்றால் பொருட்களின் தரம் குறையாமல் பாதுகாக்கப்படுகிறது. பொருட்கள் பூச்சிகள், எலிகள், ஆவியாதல் போன்றவைகளுக்கு எதிராக பாதுகாக்கப்படுகின்றன. **5. இடர்பாட்டுத் தடை** போக்குவரத்துக் கட்டுமம் உள்ளிட்டவைகள் மூலம் சரக்குகள் கொண்டு சென்றாலும், ஆட்களாலும், இயற்கையாலும் ஏற்படக்கூடிய நட்டங்களைத் தவிர்க்கமுடிவதில்லை, இந்நட்டத்தைஈடுகட்டக் காப்பீடு செய்யப்படுகிறது. தீக்காப்பீடு, கடல்சார் காப்பீடு மற்றும் பொதுக்காப்பீடு ஆகியவற்றின் வழியாக நட்டத்தைப் சரிக்கட்டமுடியும். **6. அறிவுசார் தடை** சந்தை நிலவரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாததால் நுகர்வோர் தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க இயலாமல் போய் விடக்கூடும். இத்தடைக்கு அறிவுசார் தடை என்கிறோம். நல்ல விளம்பரம் மற்றும் விற்பனையாளர் சேவைகள் மூலம் அத்தடையை நீக்கலாம். **7. பண்டப் பரிமாற்றத் தடை** பணம் பண்டப் பரிமாற்றத்தில் முக்கிய பங்கு வகுக்கிறது. பொருட்களுக்கு உண்டான சரியான விலையை செலுத்துவதன் மூலம் எந்தவொரு தயாரிப்பு அல்லது சேவையையும் வாங்குதல் மற்றும் விற்பது ஆகியவற்றை செயல்படுத்துகிறது. **8. நிதித் தடை** உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களும் அவசியமான நேரத்தில் தேவையான நிதி கிடைப்பதில்லை. வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் நிதியை

வணிக ரீதியாக செயல்படுத்துவதற்கும் பரிமாறிக்கொள்வதற்கும் நிதி உதவுகிறது. **9.பொருட்களைத் துல்லியமாக தயாரிப்பதில் தடை:** ஆராய்ச்சிகளின் மூலம் நுகர்வோரின் தேவையை அறிந்து அவர்களுக்கு தரமான பொருட்களை வழங்க முடிகிறது. **10.பொருட்களை உற்பத்தி செய்கின்ற இடத்திலிருந்து நுகர்வோருக்கு நேரடி வீட்டிற்கு கொண்டு செல்லுதல்** மின்னணு வணிகம் மூலம் பொருட்களை வீட்டிலிருந்தே வாங்கல் ஆணை பிறப்பிக்கலாம். பொருட்களை பெற்றுக்கொண்ட பின் அதற்குண்டான தொகையினை செலுத்தலாம்.

**41.ஆ தொழிலின் நோக்கங்கள் அ. பொருளாதாரக் குறிக்கோள்கள்** தொழில்கள் பொருளாதார நோக்கம் என்பது இலாபம் ஈட்டுவதேஆகும். மேலும் இலாபம் ஈட்டுவதற்கு நுகர்வோரை உருவாக்குவதல், புதிய நுட்பங்களை கண்டுபிடித்தல், வளங்களை முழுமையாக பயன்படுத்துதல் போன்ற நோக்கங்களே மிக முக்கியமானதாகும். **ஆ. சமூகக் குறிக்கோள்** சமூக நலனை பேணுவது என்பது சில தொழிலமைப்புகளை அறிய வகைகளை சமுதாயத்திற்கு நன்மை அளிக்கக் கூடிய வகையில் பயன்படுத்தப்பட வேண்டும். எந்த தொழில் நடவடிக்கைகளையும் சமுதாயத்திற்கு சிக்கல் ஏற்படுத்தும் வகையில் அமையக் கூடாது. **இ. நிறுவனக் குறிக்கோள்** தொழிலமைப்பின் மிக முக்கிய நோக்கம் தொடர்ந்து செயல்பாடுகள் மூலம் பொருளாதாரத்திற்கு உதவும் வகையில் அமையப்பெறவேண்டும். அவை நிறுவன விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கம், நுகர்வோருக்கு தரமான பொருள்களை வழங்குதல், நுகர்வோருக்கு திருப்திப்படுத்துதல் ஆகிய மூலமாக அமையலாம். **ஈ. மனிதக் குறிக்கோள்** தொழிலமைப்பு தன்னுடைய பணியாளர் நலன் மற்றும் எதிர்கால தேவையைப் நிறைவேற்றக் கூடிய வகையில் செயல்படவேண்டும். மேலும் இயலாதவர்கள், ஏழ்மைநிலையில் உள்ளவர்கள் நலம் காக்க உதவ வேண்டும். பணியாளர்கள், பொருளாதார, சமூக, உளவியல் சார்ந்த தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியவையாக அமைய வேண்டும். **உ. தேசியக் குறிக்கோள்** தொழில் நிறுவனம், ஒரு நாட்டினுடைய மிக முக்கிய அங்கமாக கருதப்படுவதால் அவை நாட்டின் நோக்கங்களையும் விருப்பங்களையும் நிறைவேற்றுகிறது. கடமை வகையில் தன்னுடைய குறிக்கோளை அமைத்து தெளிவு வேண்டும். ஒரு நாட்டின் நோக்கம் என்பது, மக்களுக்கு வேலை வாய்ப்பை அளித்தல், அரசிற்கு வருவாய் ஈட்டுதல், சரக்கு மற்றும் சேவைஉற்பத்தியில் தன்னிறைவு அடைதல், சமூக நீதியை நிலைநாட்டுதல் ஆகியவை மிக முக்கியமானதாகும். எனவே ஒரு தொழில் அமைப்பு தன்னுடைய குறிக்கோளை நிர்ணயம் செய்யும் போது மேற்கூறிய நோக்கங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

**42.அ. தனியாள் வணிகத்தின் நன்மைகள்**

**1. எளிதான அமைப்பு** தனியாள் வணிகம் மட்டுமே, வியாபார அமைப்பு வடிவங்களில், சட்ட சிக்கல்கள் ஏதுமின்றித் துவக்கலாம். ஒப்பந்தம், பதிவு போன்றவை இவ்வமைப்பிற்கு அவசியம் இல்லை. எனவே, தொழில் தொடங்க விருப்பம் உள்ளவர்கள் எவரும் இத்தொழிலை எளிதில் தொடங்கலாம். **2. கடின உழைப்பிற்கு நேரடி ஊக்குவிப்பு** முயற்சிக்கும் வெகுமதிக்கும் நேரடியாக தொடர்பு இருப்பதால், தனியாள் வணிகர் இலாபம் முழுவதற்கும் அவரே உரிமையாளர் ஆகிறார். இது அவருடைய வியபாரத்தை ஊக்குவித்து, அயராது உழைக்கச் செய்கிறது. **3. குறைந்த மூலதனம்** தனியாள் வணிகத்தை துவங்க, குறந்த முதலே போதுமானது. கூடுதல் மூலதனம் தேவைப்பட்டால், கடன் பெற்று வியாபாரத்தில் மேலும் முதலீடு செய்யலாம். **4. கடன் தகுதி** தன் வியாபாரக் கடன்களை, சொந்தச் சொத்துக்களில் இருந்தும் தீர்ப்பதால், கடனீந்தோர் எளிதாக கடன் தர முன் வருவர். அதனால், அவருக்குத் தேவையான கடன் வசதி எளிதாகக் கிடைக்க வாய்ப்புண்டு.

**5. வாடிக்கையாளர்களுடன் நேரடித் தொடர்பு** வாடிக்கையாளர்களின் விருப்பங்களைத் தெரிந்து வைத்திருப்பதால், அவர்களின் தேவைகளை எளிதாக நிறைவேற்றுகிறார். அவரின் இணக்கமான நடவடிக்கைகள்,வாடிக்கையாளர்களைத் தொடர்ந்து ஆதரவு தெரிவிக்கச் செய்கிறது.

**6. விரைவான முடிவு** தனியாள் வணிகர் ஒருவர், தானே உரிமையாளராக இருப்பதால், கால தாமதம் இன்றியும், சூழ்நிலைக்கு ஏற்றவாறும் விரைவாக முடிவு முடிவெடுக்க அவரால் முடியும்.

**42.ஆ கூட்டாண்மை நிறுவனத்தைப் பதிவு செய்ய பின்பற்றப்படும் நடைமுறைகள்** 1) நிறுவனத்தின்பெயர் 2) வணிகத்தின் தலைமையிடம் 3) பிற இடங்களில் அமைந்திருக்கும் தொழிலின் கிளை நிறுவனங்களின் முழு விவரம் 4) அனைத்துக் கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி 5) ஒவ்வொரு கூட்டாளியும் கூட்டாண்மையில் சேர்ந்த நாள் மற்றும் 6) கூட்டாண்மையின் காலம்

மேற்காணும் அறிக்கையை தயார் செய்து அனைத்துக் கூட்டாளிகளும் கையொப்பம் இட்டு, பதிவாளரிடம் பதிவுக்கட்டணம் ரூ.3 செலுத்தி, சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்காணும் அறிக்கையில், மாற்றம் செய்ய விரும்பினால், பதிவாளரிடம் 14 நாட்களுக்குள் தெரிவிக்கவேண்டும்.

**43.அ . பன்னாட்டு நிறுவனம் - இலக்கணம்** பன்னாட்டு நிறுவனம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டநாடுகளில் வியாபாரத்தை நடத்துவதாகும்.**நைல். H. ஜே கோபி**

**பன்னாட்டு நிறுவனங்களின் இயல்புகள்:**

1. உலகளாவிய வாய்ப்புகள் இருப்பதாக கருதினாலும் சில நாடுகளில் மட்டுமே இந் நிறுவனங்கள் தொழிலை நடத்துகிறது. 2. பன்னாட்டு அளவில் தங்கள் சொத்துகளின் ஒரு கணிசமான பகுதியை முதலீடு செய்கிறது. 3.இவ்வகை நிறுவனங்கள் மிகப்பெரிய நிறுவனங்கள் தொழில் அமைப்புகளை கொண்டு இயங்கி வருகிறது. 4.இந்நிறுவனங்கள் பன்னாட்டு அளவில் உற்பத்தியை மேற்கொள்கிறது மற்றும் பல நாடுகளில் தொழில் கூடங்களையும் இயக்கி வருகிறது. 5.உலகளாவிய கண்ணோட்டத்தில் நிர்வாக முடிவுகளை மேற்கொள்ள பன்னாட்டு நிறுமங்கள் வகை செய்கிறது. 6.பன்னாட்டு

நிறுமங்கள் ஒரு சில நாடுகளில் மட்டும் உற்பத்தி செய்து பல்வேறு நாடுகளில் விற்பனையை மேற்கொள்கிறது. 7.பன்னாட்டு நிறுமங்களின் செயல்பாடுகள் அனைத்தும் ஒட்டுமொத்தமாக பெரு நிறுவனங்களின் தொழிலின் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

**43.ஆ. கூட்டுறவு சங்க வகைகள்**

**வீட்டு வசதி கூட்டுறவு** உறுப்பினர்களுக்கு சொந்தமாகவோ அல்லது வாடகைக்கோ வீடுகளை பெற்றுத் தரும் சங்கங்களே, வீட்டு வசதி கூட்டுறவுசங்கங்கள் என்ப்படுகின்றன. சொந்தமாக வீடு கட்ட விரும்பும் நபர்கள் அனைவரும் ஒன்று திரண்டு வீடு கட்ட கூட்டுறவு சங்கங்களை நிறுவுகின்றனர். இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்கு சுமார் 10 முதல் 20 ஆணடு கால தவனணயில், வீட்டு கடன் தந்து ,அவர்களை சொந்த வீடு கட்டிக்கொள்ள உதவுகின்றன. சில வீட்டு சங்கங்கள், மொத்தமாக காலி நிலங்களை வாங்கி, வீடு கட்டி உறுப்பினர்களுக்கு, வாடகைக்கு வீடுகளை விடவும் செய்கின்றன. வாடகைக்கு குடி இருக்கும் நபர் அந்த வீட்டில் முழு மதிப்பையையும் செலுத்தி உரிமையாளராக ஆகவும் முடியும்.

**தயாரிப்பாளர்கள் (உற்பத்தியாளர்) கூட்டுறவுச் சங்கம்** உற்பத்தியாளர்களால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படுவது, உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கம் ஆகும். உற்பத்தியாளர்கள் அனைவரும் ஒரு மைய இடத்திற்கு வந்து , உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடலாம். அல்லது அவரவர் இருப்பிடத்தில் , உற்பத்தி செய்த முடிவுற்ற பொருளை சங்கத்திடம் ஒப்படைக்கலாம். இவ்வகை உற்பத்தி சங்கங்கள், செலவை குறைத்து உற்பத்தி செய்யப்பட்ட பொருளை மையமாக திரட்டி, ஒட்டு மொத்தமாக சந்தை இடுகின்றன. எ.கா: கூட்டுறவு நெசவாளர்கள் சங்கம், கூட்டுறவு தீப்பெட்டி தயாரிப்பாளர் சங்கம், தச்சு தொழிலாளர் கூட்டுறவு சங்கம்

**கூட்டுறவு உழவு சங்கம்** உள்ளூரில் இருக்கும் வேளாண் குடிகள், தங்களின் நிலங்களை, தனித் தனியே பயிரிடுவதற்கு பதிலாக , அவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து, பேரளவில் விவசாயம் செய்ய உதவும் சங்கம், கூட்டுறவு உழவு சங்கம் எனப்படும். அனைத்து விவசாயிகளும், நிலத்தை ஒன்று திரட்டி, சங்கமாக செயல்பட்டாலும் , அவர்களின் நில உரிமை பாதிக்கப்படாது. அவர்கள் அனைவரும் சங்கம் அமைத்து, அவர்களே நிர்வாகக் குழுவை தேர்ந்தடுத்து உழவு சங்கத்தை நிர்வகிக்க வேண்டும். நிர்வாக குழு, சந்தையின் தேவைக்கு ஏற்ப, தட்ப வெப்ப நிலையை ஒட்டி, எந்த பயிர் செய்வது, எந்த அளவில் செய்வது என முடிவு செய்யும். நிலத்தை பங்காக கொடுத்த விவசாயிகளுக்கு வாடகையும் , கூட்டாக திரட்டிய நிலத்தில், உழைத்ததற்கு கூலியும் பெறுவார்கள. இம்முறை ரஷ்யாவில் மிகவும் வெற்றி கண்டது.

**தொழில் துறை கூட்டுறவு** இந்த சங்கங்கள் சிறு தொழில் செய்யும் உற்பத்தியாளர்களால் நடத்தப்படுகிறது. கூட்டுறவு முறையில், சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில் அமைக்க இந்த சங்கம் மிகுந்த உதவி புரிகின்றது. உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்தும் மூலப்பொருட்களைப் பெற, இந்த சங்கங்கள் மிகுந்த உதவிபுரிகின்றன. **நுகர்வோர் கூட்டுறவு சங்கள்** இது நுகர்வோர்களால் ஆரம்பிக்கப் படுகின்றது. இந்த சங்கங்கள் மற்ற சில்லறை வணிகர்களை இலாப ஈட்டுவதைமட்டுமே குறிக்கோளாக கொள்ளாமல், மக்களுக்கு தரமான பொருட்களை, சிறந்த விலையில் வழங்குவதை நோக்கமாக கொண்டு இயங்கி வருகின்றன. கூட்டுறவு சிறப்பங்காடி, மாணவர்கள் கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு மளிகை சங்கங்கள் போன்ற சங்கங்கள் நுகர்வோர் கூட்டுறவின் ஒரு வடிவம் ஆகும்.

**44.அ.இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு செயல்பாடுகளை வகைப்படுத்துக.**

1) உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி. 2) இந்திய வங்கிகளின் கட்டமைப்பினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல் 3) பணவியல் உச்ச நிலை அதிகாரி 4) பொருளாதார அளவுருக்களை கூர்ந்து கண்காணித்தல் 5) புதிய சவால்களுக்கு உடனடியாகப் பதிலளிப்பது

**44.ஆ. வணிக வங்கிகளின் இரண்டாம் நிலை செயல்பாடுகள்:** I. முகமை செயல்பாடுகள் மற்றும் II. பொதுப் பயன்பாட்டு செயல்பாடுகள் என வகைப்படுத்தலாம். **I. முகமை பணிகள்** வங்கிகள் வாடிக்கையாளர்களின் முகவர்களாகச் செயல்பட்டுச் சில சேவைகளை வழங்குகின்றன. அவை முகமைசெயல்பாடுகள் என்று அழைக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு,

**1. நிதி பரிமாற்றம்** வங்கிகள் கேட்பு வரைவோலைகள், காசோலைகள், பயணிகள் காசோலைகள் போன்றவைகளை வெளியிடுவதுடன், ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நிதிகளை மாற்ற உதவுகிறது. இந்தச் சேவைக்காக வங்கிகள்,ஒரு சிறிய தரகுத் தொகையைப் பெற்றுக் கொள்கிறது. **2. காலமுறையில் செலுத்தும் முனைமம், வாடகை, முதலியன** வாடிக்கையாளர்களிடமிருந்து வரும் அறிவுறுத்தலின்படி, காப்பீட்டு முனைமம், வாடகை, தொலைபேசி கட்டணம் போன்றவைகளை வாடிக்கையாளர் கணக்கிலிருந்து மாதந்தோறும் செலுத்தும் பணியை வங்கிகள் எடுத்துக் கொள்கின்றன. **3. காசோலைகள் பெறுதல் மற்றும் செலுத்தல்** வாடிக்கையாளர்களின் சார்பாக வங்கிகள்,மற்ற வங்கிகளின் காசோலைகளை வசூலித்து, வாடிக்கையாளர்களின் கணக்கில் வரவு வைக்கிறது. இதேபோல் வாடிக்கையாளரால் வழங்கப்பட்ட காசோலை சரிபார்க்கப்பட்டவுடன் வாடிக்கையாளர் அறிவுறுத்தல்படி பணம் வழங்கப்படுகிறது. **4. பங்கு சந்தை பரிவர்த்தனைகளை நடத்துதல்** ஒரு டீமேட் மின்னணு கணக்கு வைப்பாளரால் தொடங்கப்படவேண்டும். இக்கணக்கு வாடிக்கையாளரின் சேமிப்பு கணக்கு இருக்கும் வங்கியுடன் வாடிக்கையாளரால் இணைக்கப்படுதல் வேண்டும். அதன் பின்பு வாடிக்கையாளர் கேட்டுக் கொள்வதற்கு இணங்க,அவர் சார்பில் வங்கி இணையம் மூலம் பங்குப் பத்திரங்களை வாங்குதல் மற்றும் விற்கும் பணியைச் செய்கிறது.

**5. வருமான வரிக் கணக்கைத் தயாரித்தல்**

வாடிக்கையாளர்களின் சார்பில், வங்கிகள் வருமானவரிக் கணக்கினை ஆண்டுதோறும் தயாரிக்கின்றன. அவர்களுக்கு வரி சம்பந்தமான ஆலோசனைகளை வழங்குகின்றன. **6. அந்நியச் செலாவணி வர்த்தகத்தில் ஈடுபடுதல்** வாடிக்கையாளர்களின் சார்பில், வங்கிகள் வெளிநாட்டு நாணய மதிப்பை வாங்குதல் மற்றும் விற்றல் பணியை செய்கிறது.

**II. பொதுப் பயன்பாட்டு பணிகள்** 1.கேட்டு வரைவோலை மற்றும் வங்கியாளர்களின் காசோலைகளை வெளியிடல் 2. வாடிக்கையாளர் சார்பாக மாற்றுச்சீட்டுகளின் பரிவர்த்தனைகளை ஏற்றுக் கொள்ளுதல் 3. பாதுகாப்பு பெட்டகங்கள் 4. கடன் உறுதி கடிதங்கள் 5. பயணிகள் காசோலைகள் 6.பரிசு காசோலைகள் 7.மேற்கோள் சேவை

**45.அ. இந்தியாவில் உள்ள பண்டகக் காப்பகங்களை விளக்குக.**

இந்தியா ஒரு விவசாய நாடு என்றாலும், 1950 ஆண்டு வரைபண்டகக் காப்பகத்தின் முக்கியத்துவத்தை உணரவில்லை. சரியான பண்டகக்காப்பகம் இல்லாததால், விவசாய உற்பத்தியில் 40 சதவீதத்திற்கும் மேலாக பொருட்கள் வீணாகிறது என்று மதிப்பிடப்பட்டு, அகில இந்திய கிராமப்புற கடன் கணக்கீட்டுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், விவசாய பண்டக கழகச்சட்டம் 1956, தேசிய கூட்டுறவு வளர்ச்சி மற்றும் பண்டகசாலை வாரியம் அமைக்க, அரசுக்கு அதிகாரம் வழங்கியது.

**(அ) இந்திய உணவுக் கழகம்** இது உணவு தானியங்களைப் பாதுகாக்கும் வசதிகளை வழங்குகிறது. இந்நிறுவனம் பொருட்களை பாதுகாக்கும் வசதியை மாநில, மத்திய பண்டக காப்பகங்கள், மாநில அரசுகள் மற்றும் தனியார்களிடமிருந்து வாடைக்கு எடுத்துக் கொள்கிறது. இந்திய உணவுக் கழகம் 74.6 மில்லியன் டன்கள் சரக்குகளை சேமிக்கும் திறன் பெற்றுள்ளது. பின்வரும் நோக்கங்களை நிறைவேற்ற, 1964 ஆம் ஆண்டின் உணவுச் சட்டத்தின் கீழ் இந்திய உணவுக் கழகம் அமைக்கப்பட்டது. 1. பொது விநியோக திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் உணவு தானியங்கள் விநியோகம். 2. விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில், குறைந்த வாடகையில் பொருட்களை பாதுகாத்தல். **(ஆ) மத்திய பண்டக காப்பக கழகம்** இது 1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மத்திய பண்டக காப்பக கழகத்தின் மொத்த சேமிப்பு திறன் 11.17 மில்லியன் டன்கள் ஆகும். **மத்திய பண்டக காப்பககத்தின் பணிகள்:** 1. வேளாண்பொருட்கள், விதைகள், உரங்கள், விவசாய கருவிகள மற்றும் பிற பொருட்களின் சேமிப்பிற்கான முகமைகள் ஏற்படுத்துவது. 2. பொருட்களின் உரிமையாளர்களிடம் கடன் வாங்குவதற்கான மாற்றத்தக்க பண்டக இரசீதுகள் வழங்குதல். **(இ) மாநில பண்டக காப்பக கழகங்கள்** மத்திய பண்டக காப்பக கழகத்தின் ஒப்புதல் பெற்ற பிறகு, ஒவ்வாரு மாநில அரசும் அதன் சொந்த பண்டக காப்பக கழகத்தை நிறுவ முடியும். இதை நிறுவதற்கான நிதியை 50 விழுக்காடு மத்திய பண்டக காப்பக கழகமும் மற்றும் மீதி 50 விழுக்காடு மாநில அரசும் தருகின்றது. **(ஈ) தமிழ்நாடு பண்டக காப்பக கழகங்கள்** இது 1959 ஆம் ஆணடு நிறுவப்பட்டது. தற்போது தமிழநாடு பண்டக காப்பக கழகத்தின் சேமிப்பு திறன் 6.83 லடசம் மெட்ரிக் டன் ஆகும். 7 பிராந்திய அலுவலகங்கள், 256 கோட்டங்கள் உள்ளன. இது மாநிலம் முழுவதும் அமைக்கப்படடுள்ளது.

**45.ஆ. போக்குவரத்தின் நன்மைகள்** 1. உற்பத்தி திறனை அதிகரிக்கிறது. 2. அதிகமான பொருட்களுக்கான தேவை மற்றும் பல்வேறு நுகர்வுப் பொருள்களின் தேவையைத் துண்டுகிறது. 3. சந்தையை மேம்படுத்துகிறது மற்றும் வளர்ந்து விரிவடையச் செய்கிறது 4. இது நாடு முழுவதும் பொருட்களை விநியோகிப்பதன் மூலம் விலை உறுதிப்பாட்டிற்கு உதவுகிறது 5. இது பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது. 6. இது விசேசப்படுத்தி அதிக அளவு உற்பத்திக்கு உதவுகிறது. 7. உற்பத்தி, தயாரிப்பு மற்றும் வடிவமைப்பில் புதுமைகளை ஊக்குவிக்கிறது.

**46.அ. காப்பீட்டின் கோட்பாடுகள்: 1. மிக்க நம்பிக்கை** இக்கோட்பாட்டின்படி, காப்பீடு தருநர் மற்றும் காப்பீடு பெறுநர் மிக்க நம்பிக்கை அடிப்படையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றனர். காப்பீடு பெறுநர், கருப்பொருள் பற்றிய அனைத்து உண்மைகளையும் காப்பீடு தருநருக்கும், காப்பீடு தருநர், காப்பீட்டு ஒப்பந்தம் குறித்த அனைத்து தகவல்களையும் காப்பீடு பெறுநருக்கும் தெரிவித்துவிட வேண்டும். **2. காப்பீடு பெறுநலன்** காப்பீடு பெறுநலன் என்பது, காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது, நிதி சார்ந்த அக்கறை இருத்தலைக் குறிக்கிறது. காப்பீடு பெறுநருக்கு, காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது, காப்பீடு பெறுநலன் இருக்கவேண்டும். **3. ஈட்டுறுதி** ஒருவருக்கு ஏற்பட்ட உண்மையான நட்டத்தை ஈடு செய்வதே ஈட்டுறுதியாகும். காப்பீடு பெறுநருக்கு, உண்மையில் எவ்வளவு இழப்பு ஏற்பட்டதோ, அந்த இழப்புக்கு ஈடான தொகை மட்டுமே இழப்பீடாக அளிக்கவேண்டும். இழப்பைவிட கூடுதலான தொகை வழங்கப்படாது. **4. அண்மைக் காரணம்** ஒரு இழப்பு ஏற்பட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்கள் இருப்பின், அதற்குரிய அண்மைக் காரணம் எதுவென காணவேண்டியதைப் பற்றி குறிப்பிடுவது இக்கோட்பாடு ஆகும். காப்பீட்டு ஒப்பந்த்ததின்போது, இடர் ஏற்படுவதற்கான காரணங்கள் என்று, காப்பீடு பெறுநர் கூறிய காரணங்களில், அண்மைக் காரணம் இடம் பெற்றிருந்தால் மட்டுமே, காப்பீடு தருநர் இழப்பீடு வழங்குவார். **5. பகிர்ந்தளித்தல்** ஒரே கருப்பொருள், ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டு நிறுவனங்களிடம் காப்பீடு செய்யப்பட்டிருப்பின் அதற்கு "இரட்டைகாப்பீடு என்று பெயர். காப்பீடு பெறுநருக்கு ஏற்படும் இழப்பினை, சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள், அவரவர் செய்திருக்கின்ற காப்பீட்டு ஒப்பந்த தொகைக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படையில் அவரவர்களுக்குள்ள பங்கினை பகிர்ந்து அளித்தல் வேண்டும். **6. பகர உரிமை** பகர உரிமை என்பது, ஒருவருக்கு ஏற்பட்ட இழப்பை, காப்பீடு தருநர் ஈடு செய்தபின், காப்பீடு பெறுநர் தனக்குள்ள உரிமைகளை காப்பீடு தருநருக்கு மாற்றிக் கொடுப்பது ஆகும். காப்பீடு

பெறுநர், தனக்கு ஏற்பட்ட உண்மையான இழப்பைக் காட்டிலும், கூடுதலாக ஆதாயம் அடைந்து விடக் கூடாது. அப்படி இலாபம் அடைந்தால், அது ஈட்டுறுதிக் கோட்பாட்டுக்கு எதிராக அமைந்து விடும்.

**46.ஆ. தொழிலின் சமூகப் பொறுப்புணர்வின் மூலம் நன்மை பெறும் குழுக்கள் 1) உரிமையாளர்கள் மீதான பொறுப்புணர்வு :** எவர் ஒருவர் சொந்த மூலதனம் கொண்டு ஒரு தொழிலைத் தொடங்கி, அதில் ஏற்படும் இடர்களை ஏற்கின்றாரோ அவரே தொழிலின் உரிமையாளராவார். உரிமையாளர்கள் ஏற்கும் தொழில் தொடர்பான பொறுப்புணர்வுகள் கீழ்வருமாறு 1. தொழிலை சிறப்பாக இயக்குதல் 2. மூலதனம் மற்றும் வளங்களை சரியான முறையில் பயன்படுத்தலாம். 3. மூலதனத்தின் மீதான வளர்ச்சியை வரவேற்கும் வகையில் இருத்தல். 4. நியாயமான வருமானம் தொடர்ந்து அளிக்கத்தக்க வகையில் மூலதனத்தை முறையாக முதலீடு செய்து கொள்வதாகும்.

**2) முதலீட்டாளர்கள் மீதான பொறுப்புணர்வு:** தொழிலுக்கு தேவையான நிதியினை மூலதனமாக கீழ்க்கண்ட வழிகளில் எவர் ஒருவர் அளிக்கின்றாரோ அவரே முதலீட்டாளர்கள் என அழைக்கப்படுகின்றார். அதாவது, பங்குகள், பத்திரங்கள், வைப்புகள் மற்றும் பிற. மேலும் வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் முதலீட்டு நிறுவனங்களும் இத்தகைய பிரிவில் உள்ளடங்குவார்கள். **முதலீட்டாளர்களின் பொறுப்புகள்** 1. மூலதனத்தின் பாதுகாப்பை உறுதி செய்தல் 2. முதலீட்டின் மீதான வட்டியை தொடர்ந்து செலுத்துதல் 3. குறித்த காலத்திற்குள் மூலதனத் தொகையை திருப்பிச் செலுத்துதல் போன்றவைகள் ஆகும்.

**3) பணியாளர்கள் மீதான பொறுப்புகள்** எந்த ஒரு தொழில் அமைப்பிற்கும் பணியாளர்கள் அல்லது தொழிலாளர்கள் மிகவும் அவசியமாகும். பணியாளர்கள் மன நிறைவு பெறுவதன் மூலம் நிறுவனத்தின் அனைத்து செயல்பாடுகளும் வெற்றி பெறுகின்றன. **பணியாளர்கள் பொறுப்புகள்** 1. பணியாளர்களின் கூலி மற்றும் ஊதியத்தை குறித்த காலத்தில் தொடர்ந்து வழங்குதல். 2. பணியாற்றுவதற்கு ஏற்ற இணக்கமான சூழ்நிலையை உருவாக்குதல் மற்றும் இதர வசதி வாய்ப்புகளை நல்குதல். 3. நல்ல தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி தருதல். 4. பணிப்பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பினை உருவாக்குதல். 5. அவர்கள் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துதல். 6. குறித்த காலத்தில் பயிற்சி அளித்து அவர்களின் செயல்திறனை தரம் உயர்த்துதல்**4) பொருள் அளிப்பார்கள் தொடர்பான பொறுப்புணர்வு :** உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு தேவையான, கச்சாப் பொருட்களை யார் வழங்குகின்றாரோ அவரே பொருள் வழங்குநர் எனப்படுவார். நுகர்வோர்களுக்கு தேவையான முடிவுப் பொருட்களை வழங்கும் சிலரை பதிவாளர் என அழைக்கப்படுகிறார்கள். வழங்குநரின் பொறுப்புகள் 1. பொருட்கள் கொள்முதல் செய்வதற்கான தொடர் ஆணையை வழங்குதல். 2. நியாயமான விதிமுறைகள் மற்றும் பொறுப்புறுதிகளை வழங்குதல். 3. கடனுக்கான காலக்கெடுவினை நியாயமான முறையில் அளித்தல் 4. கடன் தொகையை தவணைக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்துதல் **5) வாடிக்கையாளர் தொடர்பான பொறுப்புகள் :** வாடிக்கையாளரின் ஆதரவு இல்லாமல், எந்த தொழிலும் செயல்படுவதில்லை. தொழில் சமூகப் பொறுப்புணர்வில் வாடிக்கையாளர்கள் ஒரு முக்கிய அங்கமாக உள்ளனர். 1. பொருட்கள் மற்றும் சேவைகள் வாடிக்கையாளரின் தேவையை நிறைவேற்றும் வகையில் இருக்க, வகை செய்ய வேண்டும். 2. பொருட்கள் மற்றும் சேவைகள் தரத்தில் மேம்பாடு இருத்தல் வேண்டும். 3. பொருட்கள் மற்றும் சேவைகள் தடையின்றி தொடர்ந்து அளிக்கப்பட வேண்டும்.

| **47.அ. பொருளாதாரச் செயல்பாடுகள்** | **பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்** |
|---|---|
| **1.வரைவிலக்கணம்:**வாழ்வாதாரத் திற்காக தேவையான பணம், நிதி சார்ந்த ஆதாயங்களை ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பொருளாதாரச் செயல்பாடுகள் எனப்படும். எடுத்துக்காட்டு: பழ வியாபாரி பழங்களை விற்பது | மகிழ்ச்சி, அன்பு, இரக்கம், உணர்வுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் ஆகும். எடுத்துக்காட்டு: தாய் தன் குடும்பத்திற்காக உணவு சமைப்பது |
| **2. நோக்கம்:** இலாபம் ஈட்டுவது அல்லது நிதி சார்ந்த ஆதாயம் அடைவது ஒன்றே நோக்கம் ஆகும். எடுத்துக்காட்டு: ஒரு வழக்கறிஞர் தன் பணியைச் செய்வது | சமூக, உளவியல், உணர்வு ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஆகும். எடுத்துக்காட்டு: கோவிலுக்கு செல்வது |
| **3. பணத்தின் அடிப்படையில் அளவிடல்:** அனைத்து பொருளாதாரச் செயல்பாடுகளையும் பண மதிப்பின் அடிப்படையில் அளவிடலாம். எடுத்துக்காட்டு: ஒரு மருத்துவர் ஆலோசனைக் கட்டணம் ரூ.500 வசூலித்தல் | பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகளை பணமதிப்பின் அடிப்படையில் அளவிட முடியாது. இவைகள் எண்ணம், உணர்வுகள் ஆகியவற்றின் வெளிப்பாடு ஆகும். எடுத்துக்காட்டு: ஒரு அரசு சாரா |

| | |
|---|---|
| | அமைப்பு ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக உடைகள் வழங்குவதைக் கூறலாம். |
| **4. உறவு:** பொருளாதார நடவடிக்கைகள் செல்வத்தை உருவாக்குவதுடன் தொடர்புடையவை. எடுத்துக்காட்டு: ராம் என்பவர் சொந்தமாக வீடு வாங்குவதற்காக தனது ஊதியத்தின் ஒரு பகுதியை சேமித்து வருவது | பொருளாதாரச் சார்பற்ற நடவடிக்கைகள் செல்வத்தை உருவாக்குவதில் லை, எடுத்துக்காட்டு: நன்கொடையாகப் பெற்ற பணத்தை அறக்கொடை பணிகளுக்கு செலவிடுவது |
| **5. விளைவு:** அனைத்து பொருளாதார நடவடிக்கைகளின் விளைவு பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தி, கொள்முதல், விநியோகம், நுகர்வு ஆகும். எடுத்துக்காட்டு: நோக்கியா நிறுவனம் கைபேசிகளைஉற்பத்தி செய்து, விநியோகித்து இந்தியா முழுவதும் விற்பனை செய்கிறது. | பொருளாதாரச் சார்பற்ற நடவடிக்கைகளி ன் இறுதி விளைவு நடவடிக்கைகள் மேற்கொள்பவரி ன் மனம், உணர்வு, உளவியல் சார்ந்த மனநிறைவு ஆகும். எடுத்துக்காட்டு: சோனா என்பவர் ஆதரவற்றோர் இல்லத்தில் உள்ள குழந்தைகளுக்கு கல்வி புகட்டுதல் |
| **6. கால அளவு:** பொருளாதார நடவடிக்கைகள் திரும்பத் திரும்ப நிகழும் தன்மை கொண்டது. எடுத்துக்காட்டு: குல்பி ஐஸ்கிரீம் விற்பவர் நாள்தோறும் மாலை வேளைகளில் விற்பார். | இவை தொடர்ந்து நிகழாது. மேலும் நேரம் கிடைக்கும் பொழுது நிகழும். எடுத்துக்காட்டு: ஆதரவற்றோர் இல்லம் சென்று பார்த்தல். |
| **7. உருவாக காரணம்:** பொருளாதார நடவடிக்கைகள் மனித விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்படுகிறது. | பொருளாதாரச் சார்பற்ற நடவடிக்கைகள் உணர்வு பூர்வமாக மகிழ்ச்சியினை அனுபவிக்க செய்யப்படுகிறது |

| **47.ஆ.உற்பத்தித் தொழில்** | **வணிகம்** | **வியாபாரம்** |
|---|---|---|
| **பொருள்** உற்பத்தி தொழில் என்ற சொல் பிரித்து எடுத்தல், மறு உற்பத்தி, மாற்றுதல் பயனுள்ள பொருட்களைத் தயாரித்தல் போன்ற செயல்களைக் குறிக்கின்றது. | வணிகம் என்ற சொல் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதலை குறிக்கின்றது. | வியாபாரம் என்ற சொல் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்முதல் மற்றும் விற்பனையைக் குறிக்கின்றது. |
| **உள்ளடக்கம்** கச்சா பொருட்கள், பகுதியாக முடிவு பெற்ற பொருட்களை முழு இறுதிப் பொருளாக மாற்றும் அனைத்து நடவடிக்கையையும் உள்ளடக்கியது. | வியாபாரம் மற்றும் அதன் தொடர்புடையவற்றை உள்ளடக்கியது. | பொருட்கள் மற்றும் சேவை பரிமாற்றம் உள்ளடக்கியது. |
| **முதல்** பொதுவாக உற்பத்தி தொழிலுக்கு அதிக அளவு முதலீடு என்பது தேவைப்படுகிறது. | வணிகத்திற்கு முதல் குறைந்த அளவே தேவைப்படுகிறது. | போதுமான சரக்கிருப்பை வைத்திருக்கவும், கடன் அளிக்கவும் போதுமான முதல் தேவைப்படும். |
| **இடர்பாடு** அதிக இடர்பாட்டைக் கொண்டது. | குறைவான இடர்பாட்டைக் கொண்டது. | குறைவான இடர்பாட்டைக் கொண்டது. |
| **பரிமாணம்** பொருட்கள் மற்றும் சேவையின் வழங்கல் அளிப்பு பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. | பொருட்கள் மற்றும் சேவையில் தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. | இது அளிப்பு மற்றும் தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. |
| | **பயன்பாட்டு உருவாக்கம்** பொருட்களைத் தயாரிப்பாளரிடமிருந்து நுகர்வோருக்கு கொண்டு செல்வதன் மூலம் இடப் பயன்பாட்டை உருவாக்குகிறது. | பரிவர்த்தனை மூலம் உடைமைப் பயன்பாட்டை உருவாக்குகிறது. |